
உ

சிவமயம்



வல்வை வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரன் ஆலயம்

# திருக்கல்யாணங்கள்



ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம்

## ந. அரியரத்தினம்

12.03.2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கல்யாணங்கள்

(வல்வை வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரன் ஆலயம்
தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம்)

ந. அரியரத்தினம்

2014
இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | திருக்கல்யாணங்கள் |
| விடயம் | : | ஆன்மீகம் |
| ஆசிரியர் | : | ந. அரியரத்தினம் |
| பதிப்பு | : | முதற் பாதிப்பு (12.03.2014) |
| பதிப்புரிமை | : | ஆசிரியருக்கு |
| பக்கம் | : | 20 |
| அச்சுப்பதிப்பு | : | தமிழ்ப்பூங்கா, இலங்கை. |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

வைத்தீஸ்வர பெருமானின் பாதம் பணிந்து படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்களையும் உணர்த்துவதான மகோற்சவம் ஆன்மாக்களின் மலங்களை நீக்கி நல் அருளை இறைவனிடம் இருந்து அனைவருக்கும் கிடைக்க ஆலயம் தோறும் மகோற்சவம் பெருந்திருவிழாக்களாக நடைபெறுகின்றது. கொடியேற்றம் சிருஸ்டி என்கிற படைத்தல் தொழிலையும் தொடர்ந்து நடைபெறும் திருவிழாக்கள் ஸ்திதி என்கிற காத்தல் தொழிலையும் வேட்டைத் திருவிழா சகோபுர திருவிழா, தேர்த்திருவிழா, சம்ஹாரம் என்கிற அழித்தல் தொழிலையும் தீர்த்த திருவிழா கொடியிறக்கம் திரோபவம் என்கிற மறைத்தல் தொழிலையும் மௌன உற்சவம் ஆசார்ய உற்சவம் அனுக்கிரகம் என்கிற காத்தல் தொழிலையும் உணர்த்துகின்றது.

இந்த வகையிலே எம்பெருமான் ஆலயத்திலே பன் நெடுக்காலாமாக நைமித்திய உற்சவமாகிய மகோற்சவம் எம் பெருமான் திருவருளால் எவ்வித குறையுமின்றி கிரமமாக நடாத்தப்பட்டு வருகிறது. அந்தவகையிலே எம் பெருமானுடைய திருவிழாக்களிலே நடைபெறுகின்ற திருக்கல்யாண திருவிழா மிகவும் பக்திபூர்வமாக எல்லோருக்கும் மங்களம் கிடைக்க இறைவன், இறைவியை மணம் செய்து காட்சி தந்து மங்கள கோலத்துடன் அருள் புரிகின்றார். இந்த திருவிழா பற்றிய விளக்கங்களை அனைவருக்கும் அடுத்து வரும் சந்ததியினருக்கும் பயனுறும் வகையில் நூல் வடிவாக வெளியீடு செய்து தந்த அன்புக்குரிய ஓய்வு பெற்ற அதிபர் திரு. ந. அரியரத்தினம் அவர்களின் செயல் போற்றுதற்குரியது ஆலயத்தில் இதனை வெளியீடு செய்வதற்கான முழு ஒத்துழைப்பு நல்கிய ஆதீனகர்த்தாக்களுக்கும் எம்பெருமான் திருவருள் கிடைக்க பிரார்த்திக்கின்றேன். எல்லோருக்கும் பயனுறும் வகையில் அமைய நல் ஆசிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

சுபம்

**சிவஸ்ரீ ப. மனோகரக்குருக்கள்**

பிரதம குரு,

வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தானம்

08.03.2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

எமது சமயம் வாழ்க்கையுடன் இணைந்தது என்பதுடன் சமய தத்துவங்களின் அடிப்படையிலேயே எமது வாழ்க்கையும் நடைபெற்று செல்கின்றது என்பன போன்ற ஒரு சில கருத்துக்களையேனும் புராணங்ளை அடிப்படையாகக் கொண்ட இந்நூல் அடியார்களுக்கு ஏற்படுத்தும் என நம்புகின்றேன்.

அடியேனது பூட்டனார் வ. முருகுப்பிள்ளை அவர்கள் வல்வை வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரன் ஆலயச் சூரன், ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத் தீர்த்தக்கிணறு ஆகியவற்றுக்கான காத்திரமான திருப்பணிகளை செய்யும் பேற்றினை பெற்றது போல அடியேனது தாயார் திருமதி நடராசா வள்ளியம்மாள் அவர்களும் வல்வை வைத்தீஸ்வரன் ஆலய திருக்கல்யாண மண்டபத் திருப்பணியினை மேற்கொண்ட பேறினைப் பெற்றுள்ளார். அதே போன்று எமது தாயார் எம்மையும் இது போன்ற சிறுதுளியளவான இறைபணிகளையேனும் செய்யுமாறு ஆற்றுப்படுத்தியது நாம் முற்பிறப்பில் செய்த பூர்வ புண்ணியமே.

உற்சவகாலத்தில் அடியார்கள் கைகளில் இந்நூல் கிடைப்பதற்கு தமது முழுமையான ஆதரவை மட்டுமன்றி ஒத்துழைப்புக்களையும் வழங்கிய ஆலய அந்தணர்களுக்கும் அறங்காவலர்களுக்கும் அடியேனது உளப்பூர்வமான நன்றிகள். இதே போன்று உற்சவ கால உரிமையாளர்களும் தமது ஒத்துழைப்பை வழங்கியுள்ளனர். தமிழ்ப்பூங்கா அச்சகத்தினர் இதனை அழகுற அச்சிட்டு வழங்கியுள்ளனர் இவர்களுக்கும் அடியேனது நன்றிகள்.

இறைபணியில்

09.03.2014

ந. அரியரத்தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கல்யாணங்கள்

ஆண்டவன் சந்நிதானத்தில் நீறு எவ்வாறு திருநீறாகவும் நீர் எவ்வாறு தீர்த்த்மாகவும் உணவு எவ்வாறு நைவேத்தியமாகவும் புனிதம் பெறுகின்றனவோ அதேபோலத்தான் ஆண்டன் சந்நிதானத்தில் தெய்வங்களுக்கு மனிதர்களால் நடாத்தப்படும் திருமணங்களும் திருக்கல்யாணங்கள் என்ற புனிதத்தையும் சிறப்பையும் பெறுகின்றன. மனிதர்களுக்கு நடைபெறுகின்ற திருமணநிகழ்வுகளில் பங்குபற்றுகின்ற பொழுது பொதுவாக எமது மனதில் மகிழ்ச்சி ஏற்படுகின்றது ஆனால் எமது ஆலயங்களில் நாம் வணங்குகின்ற தெய்வங்களுக்கு இடம்பெறுகின்ற திருக்கல்யாண நிகழ்வுகளில் பங்குபற்றுகின்ற எமக்கு மகிழ்ச்சியுடன் பக்தியும் கலந்த ஒரு வித்தியாசமான மனநிறை ஏற்படுபதை நாம் உணருகின்றோம். அதுமட்டுமல்ல உண்மையான பக்தியுடனும் நம்பிக்கையுடனும் இந்த திருக்கல்யாணங்களில் பங்குபற்றுகின்ற பெண்களும் பலவகையில் பாக்கியம் பெறுகின்றனர். கன்னிப் பெண்கள் தாலிப்பாக்கியம் பெறுவதற்கும் ஏற்கனவே தாலிபாக்கியம் உள்ள பெண்களின் தாலிப்பாக்கியம் பலம் பெறுதல் உட்பட பல்வேறு நன்மைகளை இத்திருக்கல்யான காட்சிகளில் பங்குபற்றுகின்ற அடியவர்கள் பெற்றுக் கொள்கின்றனர்.

எமது சமயம் மக்களது வாழ்வியலையும் தனது செயற்பாடுகளில் உள்வாங்கிச் செல்கின்றது. இதனால் வாழ்க்கை வேறு சமயம் வேறு என்று இல்லாமல் சைவமக்களாகிய நாம் வாழ்வியலுடன் இணைந்தே சமய விடயங்களையும் செயற்படுத்திச் செல்லக்கூடிய ஒரு சிறப்பைப் பெற்றுள்ளோம். ஒரு ஆணும் பெண்ணும் இல்லற வாழ்க்கையில் இணைய விரும்பி மணவறையில் திருமணக் கோலத்தில் இருக்கும் பொழுது அவர்களின் அந்த திருமணக் கோலத்தையும் மணமகன் மணமகள் ஆகியோருக்கிடையே ஏற்பட இருக்கின்ற அந்த உறவையும் புனிதமானதாகவே எமதுசமயம் கருதுகின்றது. அதுமட்டுமன்றி அவர்களது சமுகவாழ்வில் அவர்கள் இல்வாழ்க்கைக்குரிய தர்மநெறியில் தமது வாழ்க்கைப் பாதையை வகுத்துச் செல்வார்களாக இருந்தால் அதுவே இவ்வுலகின் மிகவுயர்ந்த உண்ணத நிலையாகவும் கருதப்படுகின்றது. பொது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதிக் கருத்துக்களை உலகசமுதாயத்திற்கு எடுத்துக் கூறி தமிழ்மொழிக்குப் பெருமை சேர்த்த தெய்வப் புலவர் திருவள்ளுவரும் இல்வாழ்க்கை தொடர்பான இக்கருத்துக்களை தனது நீதிக் கருத்துக்களில் வலியுறுத்துவதையும் காணுகின்றோம். மேலும் வள்ளுவர் பெருமான் இதனை தனக்கே உரித்தான தனித்துவமான முறையில் இரண்டு அடிகளில் இரத்தினச் சுருக்கமாக

*இயல்பினால் இல்வாழ்வான் என்பான்*
*முயல்வாருள் எல்லாம் தலை*

என அழகாகவும் அற்புதமாகவும் குறிப்பிடுகின்றார்.

ஆம் மனிதர்களுடைய திருமணபந்தத்திற்கும் அவர்களது இல்வாழ்க்கைக்கும் இவ்வளவு உயர்வும் சிறப்பும் இருக்கும் பொழுது தெய்வங்களுக்கு இடம் பெறும் திருக்கல்யாணங்கள் ஒவ்வொன்றும் எவ்வளவு பொருள் பொதிந்ததாகவும் புனிதம் நிறைந்ததாவும் பயனுடையதாகவும் அமைந்திருக்கும் என்பதை நாம் உணர்ந்து கொள்ள முடியும்.

## வல்வை வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரன் ஆலயம்

தினமும் ஆறு கால பூசைகள் இடம்பெறுவதுடன் முழு வருடத்திற்குமான தின உற்சவ விபரங்களை முன்பே திட்டமிட்டு அவற்றை அடியார்களுக்கு வெளிப்படுத்தி அதன்படி செயற்பட்டு அடியார்களை ஆன்மீக ரீதியில் ஈடேற்றுக்கின்ற சிறப்புக்குரிய ஆலயம் வல்வை வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரன் ஆலயமாகும். இதே போன்று ஆலயம் ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் இன்று வரை தூய சைவமுறைப்படியான வழிபாட்டு ஆசாரமுறைகளை அடியார்கள் இன்றும் இந்த ஆலயத்தில் இறுக்கமாக பின்பற்றி வருகின்றனர்.

ஆம் நீண்ட வரலாற்றுப் பராம்பரியம் உடையதும், சைவம் தழைத்தோங்கிய தாய்த்தமிழகத்து மரபுகளை பெருமளவு உள்வாங்கி ஈழமண்ணில் இன்றும் தனித்துவம் குன்றாது அடியார்கள் ஆழமாகவும் தூய்மையாகவும் பக்திசெலுத்துகின்ற ஓர் ஆலயம் தான் வல்வை வாலாம்பிகா சமேத வைத்திஸ்வரன் ஆலயம் ஆகும். இவ்வாலயத்தின் வருடாந்த மகோற்சவத்தில் இடம் பெறும் பஞ்சரத தேர்த்திருவிழா,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுத்திரத் தீர்த்தம், கல்யாணத் திருவிழா என்பன ஆலயத்தின் தனித்துவத்தை வெளிப்படுத்துகின்ற உற்சவங்களாகும். அதிலும் பன்னிரண்டாம் நாள் நடைபெறுகின்ற திருக்கல்யாணத் திருவிழா அனைவரையும் பக்தி பரசவத்தில் ஆழ்த்துகின்ற இயல்புடைய திருவிழாவாகும். ஆலயத்தின் இரண்டாம் வீதியில் வடக்குத் திசையில் இதற்கென சிறப்பாக நிர்மானிக்கப்பட்டுள்ள திருக்கல்யாண மண்டபத்தில் பட்டாடைகள் அணிந்த அந்தணர்களும் அடியார்களும் புடைசூழ இந்திரலோகத்தில் நடைபெறுவது போன்ற உணர்வுடன் இந்த திருக்கல்யாண நிகழ்வு நடைபெறுவது அனைவருக்குமே மறக்கமுடியாத உற்சவமாக இடம் பெற்று வருகின்றது.

சிவன் பார்வதி திருக்கல்யாணங்கள் யாழ் மாவட்டத்தில் பல்வேறு சிவன் ஆலயங்களில் இடம்பெற்றாலும் அந்த திருக்கல்யாணங்கள் வல்வை வாலாம்பிகா சமேத வைத்திஸ்வரன் ஆலயத்தில் இடம் பெறுவதைப் போன்று வருடாந்த உற்சவம் ஆரம்பமாகி பன்னிரண்டாம் நாள் உற்சவத்தின் (சிவனின் ஆறாவது நாள் உற்சவம்) பொழுதுதான் இடம் பெறுகின்றன எனக் கூறமுடியாது. அது அந்தந்த ஆலயங்கள் ஆரம்பிக்கப்பட்ட காலம் அந்த அந்த ஆலயச் சூழல் மரபுகள் என்பவற்றுக்கேற்ப வேறுபடுகின்றன.

### காலை உற்சவம்

வல்வை வாலாம்பிகா சமேத வைத்திஸ்வரன் ஆலயத்தில் பன்னிரண்டாம் நாள் உற்சவத்தின் பொழுது இடம்பெறும் இந்த சிவன் பார்வதி திருக்கல்யாணத்தில் சிவன் பார்வதி திருக்கல்யாணம் நிச்சயிக்கப்படும் நிகழ்வுகள் காலைத்திருவிழாவின் பொழுதும் சிவன் பார்வதிஅம்பாளுக்கு திருமாங்கல்யம் அணிந்து திருக்கல்யாணம் நிறைவேறுகின்ற நிகழ்வு இரவுத் திருவிழாவாகவும் முறைப்படி காலம் காலமாக இடம் பெற்று வருவது ஒரு தனித்துவமான சிறப்பாகும்.

காலை பத்து மணி அளவில் வசந்த மண்டபத்தில் இருந்து அம்பாள் தவம் செய்கின்ற தவக் கோலத்தில் தவச் சாலைக்குச் சென்று அங்கே சிவனை அடைவதற்காக தவத்தினை மேற்கொள்வார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே நேரம் சிவபெருமான் வசந்த மண்டப வாசலில் எழுந்தருளி இடத்தில் இருந்து சமாவர்த்தனம் நடைபெறும். பின்பு பிரமச்சாரி நிலையில் இருந்த விடுபட்டு இல்லற வாழ்க்கையில் ஈடுபடுவதற்கான நிலைக்காக வீதியுலா புறப்பட்டுச் செல்வார்.

ஒரு காலத்தில் உமாதேவியார் தக்கனுக்கு மகளாக தாட்சாயினி என்ற பெயருடன் பிறந்ததும் தக்கன் தனது யாகத்தில் சிவபெருமானை அவமதித்ததும் புராணங்கள் வாயிலாக நாங்கள் அறிந்த விடையங்களே. இதனால் தாட்சாயினி என்ற அந்த கறை படிந்த பெயருடன் கூடிய உடம்புடன் வாழவிரும்பாத உமாதேவியார் சிவபெருமானிடமே தனது மனக் குறையை எடுத்துக் கூறுகின்றார். அப்பொழுது சிவபெருமான் இமயமலை அரசன் இமவரன் குழந்தை வேண்டி தவம் இருக்கின்றான். ஆகவே நீ இமவரனுக்கு குழந்தையாக பிறந்து என்னை அடையலாம் என கூறுகின்றார். இதற்கிணங்கவே உமாதேவியார் இமயமலை அரசனுக்கு மகளாகப் பிறந்து சிவபெருமானை அடைவதற்காக ஐந்து வயதில் இருந்தே தனது தோழிகள் துணையிருக்க இமயமலைக்காட்டில் தவத்தினை மேற்கொள்ள ஆரம்பிக்கின்றார். இவ்வாறு பார்வதி அம்மையார் சிவபெருமானை அடைவதற்காக தவமிருக்கும் படலம் **தவம்காண்படலம்** என கூறப்படுகின்றது.

கச்சியப்பச் சுவாமிகள் இயற்றிய கந்தபுராணம் ஆறு காண்டங்களை உள்ளடக்கியது. இதில் முதலாவது காண்டம் உற்பத்திக் காண்டமாகும். இந்த உற்பத்திக் காண்டத்தில் இருபத்தாறு படலங்கள் காணப்படுகின்றன. இந்த இருபத்தாறு படலங்களில் ஒன்றாக அமைந்துள்ள **தவம்காண் படலத்தில்** தான் உமாதேவியார் இமயமலைக் காட்டில் தவம் இருந்து சிவனை மணம் செய்வது தொடர்பான விடயங்கள் உள்ளடங்கி உள்ளன.

உண்மையில் சிவன் பார்வதி திருக்கல்யாண நிகழ்வில் அடிப்படையானதும் உயிரோட்டம் உள்ளதுமான பகுதிகள் இந்த தவம்காண் படலத்திற்குள் அடங்கி இருப்பதனால்தான் வல்வை வாலாம்பிகா சமேத வைத்திஸ்வரன் ஆலயத்திலும் அதற்கு கூடிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியத்துவம் வழங்கப்பட்டு வருகின்றது. ஆலயத்தின் மேற்கு வீதியில் இதற்கென நிரந்தரமாக மண்டபம் அமைக்கப்பட்டு அங்கே பார்வதி அம்மையார் தவக் கோலத்தில் இருக்கும் காட்சியும் மிகவும் உருக்கமான முறையில் வெளிப்படுத்தப்பட்டு வருகிறது.

இவ்வாறு உள்ளத்தைத் தொடும் உணர்வு பூர்வமான நிலையில் தவக் கோலத்தில் இருக்கும் பார்வதி தேவியார் தான் கடும் தவம் இருப்பதால் இறக்கும் நிலை ஏற்பட்டாலும் சிவனை அடைவதற்காக தான் மேற்கொள்ளுகின்ற தவத்தினை ஒரு போதும் கைவிடப்போவதில்லை எனக் கூறுவது உட்பட உள்ளத்தைத் தொடுகின்ற பல காட்சிகள் மிகவும் பொருள் பொதிந்த சொற்பதங்களாலும் உதாரணங்களாலும் இந்த தவம்காண் படலப் பாடல்களால் வெளிப்படுத்தப்பட்டிருப்பதை நாம் காணமுடியும்.

தவம் இருக்கும் பார்வதிதேவியிடம் வேதங்களைக் கற்ற கிழப் பிராமணரைப் போல சிவபெருமான் வடிவம் கொண்டு தன்மீது பார்வதிதேவியார் வைத்துள்ள அன்பினையும் காதலையும் பரீட்சிக்கும் வகையிலும் அவர் மேற்கொள்கின்ற தவத்தின் உறுதியையும் ஆழத்தையும் சோதிப்பது தொடர்பாகவே இந்த பாடல்களின் உள்ளடக்கங்கள் பெரும்பாலும் அமைந்தள்ளன. இறுதியில் சிவபெருமான் தான் கொண்ட பிராமணவடிவத்தை நீக்கி இடபவாகனத்தில் தனது உண்மையான திருக்காட்சியை பார்வதிஅம்மையாருக்கு காண்பிக்கின்றார்.

அப்பொழுது பார்வதிதேவியார் சிவபெருமானின் திருக்கோலத்தைப் பார்த்து திடுக்கிட்டு பின்பு நாணம் அடைந்து பலதடவைகள் சிவபெருமானை வணங்கி துதிக்கின்றார். அத்துடன் அளவற்ற அறிவுள்ளவர்களாலும் அறியமுடியாத பரம்பொருளான தங்களையும் தாங்கள் கொண்ட மாயச் செயலையும் அறியாது தங்களை இகழ்ந்து நிந்தனை செய்ததை மன்னிக்குமாறும் சிவபெருமானிடம் கேட்கின்றார். கச்சிப்பர் பாடிய அப் பாடலை பாடல் வடிவிலே இங்கே அடியார்களுக்கு வழங்குகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தொலைவறு பகவன் வான் மீத்தோன்றலும் துளங்கி நாணி*
*மலைமகள் கண்டு பல்கால் வணங்கி அஞ்சலியாற் போற்றி*
*அலகிலா உணர்வால் எட்டா ஆதி நின் மாயை தேறேன்*
*புலனிலாச் சிறியேன் நின்னை இகழ்ந்தவா பொறுத்தி என்றாள்*

இவ்வாறு பார்வதி அம்மையார் தனது உணர்வை வெளிப்படுத்திய நிலையில் சிவவெருமான் துன்பத்தைத் தரும் கடும் தவத்தை தொடர்ந்தும் செய்யவேண்டாம் எனவும் நாளைக்கே உன்னை திருமணம் புரிவோம் எனவும் கூறி அருள்கின்றார். இவ்வாறு காலையில் சிவன் பார்வதி திருமணம் தவச்சாலையில் நிச்சயிக்கப்பட்ட நிலையில் அம்பாள் வீதிவலம் வந்து தனது இருப்பிடமாகிய வசந்த மண்டபத்திற்கும் சிவன் நடேசர் வாசலாகிய எழுந்தருளி இடத்திற்கும் செல்வார்கள்.

## மாலை உற்சவம்

மாலைத்திருவிழாவின் ஆரம்பமாக சிவபெருமான் தனது இருப்பிடத்தில் இருந்த புதுப்பட்டாடை உடுத்து மணமகனுக்குரிய கோலத்தில் மங்களவாத்தியம் முழங்க மணமகள் இல்லமான கல்யாண மண்டபத்திற்கு வந்த சேர்வார். அங்கே மணமகளான பார்வதிதேவியார் புது உடுப்புக்கள் அணிந்து மணமகள் கோலத்தில் தனது இருப்பிடத்தில் இருந்து வந்து மணமகனான சிவபெருமானுக்கு மாலை அணிவிப்பார். பின் மணமகளான பார்வதி அம்பாளுக்கு சிவபெருமானும் மாலை அணிவிப்பார். இவ்வாறு மூன்று முறை சிவன் பார்வதி அம்மை ஆகியோருக்கிடையே மாலை மாற்றுதல் இடம் பெறும்.

இதைத் தொடர்ந்து சிவன் பார்வதி திருக்கல்யாணத்திற்கென நிரந்தரமாக அமைக்கப்பட்ட கல்யாண மண்டபத்திற்கு மணமகனான சிவன் மங்களவாத்தியத்துடன் அழைத்துச் செல்லப்பட்டு அங்கே அவர் மணமகன் கோலத்தில் மணவறையில் அமர்ந்திருப்பார். அதேபோன்று மணமகளான பார்வதிதேவியார் மணவறைக்கு வந்து சேர்வார். இவ்வாறு வந்து சேர்ந்தவுடன் மணமகனான சிவபெருமான் மணமகளுக்குரிய உபசரணைகள் முழுவதையும் இவ்வுலக மாந்தரிடையே இடம் பெறுவது போன்று முறைப்படி வழங்குவார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு எல்லாவகையான சிறப்புக்களையும் உடைய அந்தணர் குடும்பத்தில் உள்ள ஒருவருக்கு எவ்வாறு ஒரு திருமணம் நடைபெறுமோ அவ்வாறான சடங்குகளும் மரபுகளும் முழுமையாக பின்பற்றப் பட்டே இந்த திருக்கல்யாணம் நடாத்தப்படுகின்றது. தற்பொழுது ஆலயத்தின் பிரதமகுரு சிவஸ்ரீ பரமேஸ்வர மனோகரக் குருக்களும் அவரது துனைவியாரும் தலைமைதாங்கி எல்லா அந்தணர்களும் புடைசூழ இந்த திருக்கல்யாணத்தை நடத்திவைக்கும் பேற்றினைப் பெற்றுள்ளனர்.

இவ்வாறு வல்வை வைத்தீஸ்வரர் ஆலயத்தில் மாலை உற்சவத்தில் நடைபெறும் சிவன், பார்வதி திருக்கல்யாண நிகழ்வில் பங்குபெறும் ஒருவர் கைலாயத்திற்கு சென்று கைலாயத்தில் நடைபெறும் திருமண நிகழ்வில் பங்குபற்றியது போன்ற உணர்வுகளை அவர் முழுமையாகப் பெறமுடியும் எனக் கூறுவது தவறாகாது. இந்தத் திருமண நிகழ்வில் அழகின் உச்சநிலைக்கு மண்டபத்தையும் மணவறையையும் அலங்கரித்து ஆடம்பரத்தின் உச்ச நிலைக்கு சிவனையும் பார்வதி அம்மனையும், தங்க நகைகளாலும் பட்டாடைகளாலும் அழகுபடுத்தியிருப்பதை காண்பது கண்கொள்ளாக் காட்சிகளாக இருக்கும். இங்கே எந்த அழகை எந்த அழகு வெல்லும் எனப் போட்டிபோடும் அளவிற்கு எல்லாமே அழகுமயமாகக் காட்சிதரும். அதேநேரம் அந்தணர் குடும்பங்களைச் சேர்ந்த பெண்களும் அங்கே ஏராளமாக சமூகமளித்திருப்பார்கள். திருமண வீட்டில் பெண்கள் மணமகளுக்கு அருகில் இருந்து கைங்காரியங்களை செய்வது போன்று இங்கேயும் மணமகளான பார்வதி அம்மனுக்கு செய்யவேண்டிய சில காரியங்களை இந்த புரோகிதர்களுடைய துணைவியர் செயற்படுத்துவார்கள். இந்த திருக்கல்யாண நிகழ்வு பொதுவாக இரவு 7.00 மணியளவில் ஆரம்பமாகி இரவு 9.00 மணியளவில் நிறைவுபெறுவது வழக்கம்.

இலங்கையிலே மிக ஆடம்பரமாக உடை உடுத்து அதிகளவு நகைகள் அணிந்து அதேநேரம் தமிழ் சைவ கலாச்சாரங்களை முழுமையாக அனுசரித்து தங்களை அழகுபடுத்தும் சிறப்புக்குரியவர்கள் எனக் கருதப்படுபவர்கள் வல்வை மக்களாவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களில் முக்கியமாக பெண்கள் இந்த சிவன், பார்வதி கல்யாண நிகழ்விற்கு தங்களை உச்ச நிலைக்கு அலங்கரித்து புதியவிலையுயர்ந்த பட்டாடைகள் அணிந்து உடல்முழுவதும் பெறுமதியான தங்க ஆபரணங்கள் அணிந்து உடலாலும் உள்ளத்தாலும் முழுமையான நிறைவுடன் இதில் கலந்து கொள்வதைக் காணமுடியும். இவ்வாறான ஒரு காட்சியை இந்தக் கிராமத்தைச் சேராத ஒருவர் முதன்முறையாக காண்பாராக இருந்தால் தான் காண்கின்ற காட்சி பூலோகத்தில் காண்கின்ற காட்சியா? அல்லது தேவலோகத்தில் காண்கின்ற காட்சியா? என பிரமித்துத் தான் ஆகவேண்டும்.

இந்த சிவன், பார்வதி திருக்கல்யாண நிகழ்வில் திருமண மண்டபம் முழுவதும் அடியார்கள் நிறைந்திருப்பார்கள். இங்கே ஆண்களும் பெண்களும் பெருமளவில் பங்கு கொண்டாலும் பெண்ணடியார்களே ஒப்பீட்டளவில் அதிகமானவர்களாக காணப்படுவார்கள். இந்த திருக்கல்யாணத்தில் பங்குபற்றுகின்ற கன்னிப் பெண்களுக்கு விரைவாக திருமணம் நடந்தேறும் என்ற நம்பிக்கை இப்பகுதி மக்களிடையே காலம் காலமாக இருந்து வருகின்றது. இதில் பங்குபற்றுகின்ற ஒவ்வொருவருக்கும் இந்தத் திருக்கல்யாணத்தில் பங்குபற்றுகின்ற உணர்வு மறக்கமுடியாத அனுபவமாக அமைந்திருக்கும். இதில் பங்குபற்றுகின்ற ஒவ்வொருவர் உள்ளத்திலும் தேவலோகத்திற்கு சென்று அங்கே நடைபெற்ற திருமண நிகழ்வு ஒன்றில் பங்குபற்றிவிட்டு திரும்புகின்ற உணர்வே வெளிப்பட்டுக் கொண்டிருக்கும்.

சிவன் பார்வதி திருக்கல்யாணத்திற்கு அடுத்தநாள் சிவபெருமானுக்கு தைலாப்பியங்க முழுக்கு இடம் பெறும் அதாவது சிவபெருமானுக்கு திருமுழுக்கு நடைபெற்று ஆலாத்தி எடுக்கின்ற செயற்பாடுகள் எல்லாம் மிகச் சிறப்பாக இடம்பெறும். அதனைத் தொடர்ந்து சிவபெருமான் அம்பாள் மடியில் கால்வைத்து சயனம் செய்யும் காட்சி அடியார்களுக்கு காணக்கிடைத்தற்கரிய கண்கொள்ளாக் காட்சியாக அமைந்திருக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவனும் உமாதேவியாரும் வேறு வேறாக இருந்தால் உலகத்தில் செயற்பாடுகள் எதுவும் இடம்பெறாத சூழ்நிலையே காணப்படும். அவ்வாறு இல்லாமல் உலக இயக்கம் இடம்பெறுவதற்கு சிவனும் உமாதேவியாரும் இணைந்தே இருக்கவேண்டும். இந்த அடிப்படைத் தத்துவங்களை சைவமக்களாகிய நாம் புராணங்களிலிருந்து விளங்கிக் கொள்வதற்காகவே சிவன் பார்வதி திருக்கல்யாண நிகழ்வுகளும் ஆலயங்களில் இடம் பெறுகின்றன.

## தொண்டைமனாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயம்

தானாக நாடிவந்து குடிகொண்டு தனது வற்றாத திருவருளை ஈழத்தில் வாழ்கின்ற அடியார்களுக்கு மட்டும் அன்றி உலகம் முழுவதும் பரந்து வாழும் தனது மெய்யடியார்களுக்கு அள்ளிவழங்கிக் கொண்டிருக்கும் கந்தக்கடவுளது ஆலயம் தான் ஸ்ரீ செல்லச்சந்நிதி முருகன் ஆலயம் ஆகும். சந்நிதி முருகனால் ஆட்கொள்ளப்பட்ட மருதர் கதிர்காமரே இவ்வாலயத்தின் முதற்பூசகர் ஆவார். இவ்வாறு 1840 ஆம் ஆண்டு முதற்பூசகராக பூசையை மேற்கொள்ள ஆரம்பித்த மருதர் கதிர்காமரின் ஆறாவது சந்ததியினரே இன்றும் ஸ்ரீ செல்லச்சந்நிதி முருகன் ஆலயத்தில் தொடர்ந்தும் பூசகர்களாக பூசையை மேற்கொண்டு வருகின்றனர். இங்கே ஆலயத்தை நிர்வகிப்பதற்கென அறங்காவல் சபை செயற்படுவதில்லை. சந்நிதி ஆலயத்தில் பத்தாம் நாள் தொடக்கம் தொடர்ந்து நடைபெறும் வருடாந்த உற்சவ நாட்களிலும் மற்றும் தைப்பூசம் போன்ற முக்கியத் தினங்களிலும் நானே அடியவர்களில் ஒருவர் போல வந்து எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வேன் என மருதர் கதிர்காமருக்கு முருகப்பெருமான் வழங்கிய அருள் வாக்குக்கு இணங்க சந்நிதி முருகனே மறைபொருளாக நின்று இவ்வாலயத்தை வழிநடாத்திவரும் அற்புதம் இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அதுமட்டுமல்ல சந்நிதி முருகனுக்கும் இங்கே வழிபட்டு வருகின்ற அடியவர்களுக்கும் இடையே உள்ள பக்தி உறவு தாய் சேய் உறவைப் போன்று மிகவும் இறுக்கமானதாகவும் உயிர்துடிப்புள்ளதுமான உறவாக இருந்து வருகின்றது. சந்நிதியான் தன்னை நாடிவரும் அடியவர்களின் துன்பங்கள் துயரங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்கும் அற்புதக்கந்தனாகவும் விளங்குவதனால் இங்கே அலைஅலையாக அடியார்கள் ஒன்று கூடுவதைக்காணலாம்.

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் பூசகர்கள் கதிர்காமத்தைப் போல வாய்கட்டிப் பூசையை மேற்கொண்டு வருகின்றனர். அதே நேரம் ஈழத்தில் மிகச் சிறப்பாக கந்தபுராண படிப்பு இடம் பெறும் ஆலயங்களில் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயமும் ஒன்றாக விளங்கிவருகின்றது. அது மட்டுமன்றி இங்கே பிரதம பூசகர்களில் ஒருவராக வாய்கட்டி பூசைசெய்கின்ற சிவசண்முகஜயர் தான் இந்த கந்தபுராணபடிப்பிற்கு தலைமைதாங்கி அதனை பக்தி பரவசமுடையதாகவும் நிறைவானதாகவும் வழிப்படுத்திக் கொண்டிருக்கின்ற சிறப்பும் இங்கே இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. இவரை இந்நிலைக்கு ஆற்றுப்படுத்தியவர் இவரது தந்தையாராகிய ஆறுமுகசாமி ஐயர் ஆவார். ஈழத்தில் எல்லா பகுதிகளில் இருந்தும் கந்தசஷ்டி விரதத்திற்காக அடியார்கள் இவ்வாலயத்தில் ஒன்று கூடுவதும் இவ்வாலயத்தின் தனித்துவமான சிறப்பாகும்.

கந்தசஷ்டி விரதம் சூரன் போருடன் நிறைவு பெறுகின்றது. இவ்வாறு சூரசங்காரம் நடைபெற்ற அன்று இரவு தெய்வானை அம்மன் திருமணம் இடம்பெறும். இது இந்திரன் தனது மகளான தெய்வானை அம்மனை முருகப்பெருமானுக்கு திருமணம் செய்து வைக்கின்ற நிகழ்வாக இடம் பெறும். அதிகமான ஆலயங்களில் இவ்வாறு நடை பெறும் தெய்வானை அம்மன் திருக்கல்யாணத்துடன் சேர்த்தே வள்ளி திருமண நிகழ்வையும் நடாத்தும் வழக்கம் காணப்படுகின்றது.

## வள்ளி திருமணம்

கந்தபுராணத்தின் இறுதிக் காண்டமாக தட்சகாண்டம் இடம்பெறுகிறது. இந்த தட்சகாண்டத்தில் தான் **வள்ளியம்மை திருமணப்படலம்** இடம்பெறுகிறது. இதனை அனுசரித்தே தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் சூரன் போர் முடிவடைந்து ஏறத்தாழ இரண்டு வாரங்களின் பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகப்பெருமான் வேடுவகுலப் பெண்ணான வள்ளியை திருமணம் செய்யும் வள்ளி திருமண நிகழ்வு மிகவும் பக்திப் பரவசத்துடன் நடைபெற்று வருகிறது. பொதுவாக இந்நிகழ்வு இரவு 9.00 மணியளவில் ஆரம்பமாகி 12.00 மணியளவில் நிறைவு பெறுகிறது.

வள்ளியம்மன் திருணப்படலத்தில் வரும் காட்சிகள் பக்திப்பரவசமூட்டும் காட்சிகளாகவும் அதில் இடம் பெறும் பாடல்கள் பக்திச் சுவை சொட்டும் பாடல்களாகவும் இடம் பெற்றிருக்கின்றன. பார்வதிதேவியார் கடும் தவம் இருக்கின்ற இமயமலையில் உள்ள தவச்சாலைக்குச் செல்வதற்கு வேதங்கள் கற்ற கிழப்பிராமணவடிவம் எடுத்து செல்கின்ற தந்திரத்தை சிவபெருமான் கையாழுகின்றார். இங்கே வள்ளிதிருமணத்தில் காட்டில் தனியாக தினைப்புனம் காக்கின்ற வள்ளியை முருகப்பெருமான் அணுகி அவருடன் உரையாடுவதற்கு தலைநரைத்த முதியவர் வேடம் எடுத்துச் செல்லுகின்ற தந்திரத்தை கையாழுகின்றார்.

அதுமட்டுமன்றி தினைப்புனம் காக்கின்ற வள்ளி தன்னை மிகவும் நெருக்கமாக நெருங்குவதற்கு முருகப் பெருமான் தனது தமையனான விநாயப்பெருமானது உதவியை நாட அவர் யானை வடிவில் வந்து வள்ளியை பயப்படவைத்து அதனூடாக முருகப்பெருமானை நெருங்குகின்ற உபாயங்களைக் கையாளுகின்றார். இவையெல்லாம் சிறுவர் முதல் பெரியவர் வரையுள்ள ஆண்கள் பெண்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் பக்தியும் கலந்த பக்திப்பரவசமூட்டும் காட்சிகளாக அமைந்துள்ளன. இதனால் தான் வள்ளியம்மன் திருக்கல்யாணப் படலத்தில் வெளிப்படும் காட்சிகளை தெவிட்டாத சுவையுடன் காலம் காலமாக அடியார்கள் அனுபவித்து வருகின்றனர்.

ஈழத்தின் வடபகுதியில் வாழுகின்ற ஆயிரக்கணக்கான மக்கள் சந்ததி சந்ததியாக தமது திருமணங்களை ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் இன்றும் தொடர்ந்தும் நடாத்தி வருகின்றனர். இவ்வாறு அடியவர்களது திருமணங்கள் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் நடைபெறுகின்றன எனக் கூறினாலும் உண்மையில் அவை வள்ளியம்மன் சந்நிதியில் தான் நடைபெறுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம்! சந்நிதியில் திருமணம் என்றால் அது வள்ளி அம்மன் சந்நிதியில் தான் இடம்பெறும். அங்கேதான் மணமகனால் மணமகளுக்கு மாங்கல்யம் அணிவிக்கும் நிகழ்வு நடந்தேறும். ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் அவ்வாறான சிறப்பிற்குரியவர் வள்ளியம்மை ஆவார். அவ்வாறான சிறப்புக்குரிய அந்த வள்ளியம்மைக்கே நடைபெறும் திருக்கல்யாணம் தான் வள்ளி திருமணமாகும்.

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் ஆரம்பத்தில் செல்லையா ஐயர் அவர்களும் பின் அவருடைய சந்ததியினரும் இந்த வள்ளி திருமண நிகழ்வை சிறப்பாக நடாத்தி வந்துள்ளார். தற்போது இடம்பெற்றுவரும் வள்ளி திருமண நிகழ்விற்கு தலைமைப் புரோகிதராக இருந்து அதனை செயற்படுத்தி வரும் பேறினைப் பெற்றவர் ஆ. சிவசண்முக ஐயர் ஆவார்.

சிவன் பார்வதிதேவியார் திருக்கல்யாணத்தில் மலையரசன் காமதேனு பொழிந்த பால், வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம் முதலியபொருட்களை நிவேதித்தான். அதேபோன்று இந்த வள்ளி திருமண நிகழ்வு வேடுவ குலத்தில் பிறந்த வள்ளியம்மனுக்கும் முருகப் பெருமானுக்கும் நடைபெறும் திருமணம் என்பதால் எல்லாவகையான பழங்களும் சிறப்பாகப் படைக்கப்பட்டிருக்கும். வேடுவ குலத்தின் முக்கிய உணவாகிய தேன், தினைமா என்பவற்றை உள்ளடக்கிய மாவிளக்கு சிறப்பாக இங்கே படைக்கப்படும். சாதாரணமாக அடியவர்களால் படைக்கப்படும் மாவிளக்கை நாம் பார்த்திருக்கின்றோம். இங்கே வள்ளி திருமண நிகழ்வுக்கென விசேடமாக மாவிளக்கு தயார் செய்யப்படும். இதற்கென விசேடமாகப் பெறப்பட்ட காட்டுத்தேன் சுத்தமான பசு நெய் என்பவையே பயன்படுத்தப்படும். இந்த திருமண நிகழ்வுக்கென மிகவும் பெரிய உருவங்களில் மாவிளக்குகளை பூசகர்களே தயார் செய்வார்கள். திருமணச் சடங்குகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையில் இந்தப் பெரிய மாவிளக்குகள் அங்கே நைவேத்தியமாக நெய் ஊற்றி எரியவிடப்படும். அந்த மாவிளக்குகளிலிருந்து எழும்பும் ஒளிச்சுடர்கள் பார்ப்பதற்கு ரம்மியமான தோற்றத்தையும் பக்திப் பரவசத்தையும் அனைவருக்கும் ஏற்படுத்துவதாக அமைந்திருக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளி திருமண நிகழ்வை பொதுவாக நாடகங்களாக, நாட்டியங்களாக, இசை நாடகங்ககளாக, வில்லுப் பாட்டாக எல்லாம் மேடைகளில் பார்த்து மிகவும் இனிமையுடன் ரசித்திருக்கின்றோம். அந்தக்காட்சிகளின் உச்சக்கட்டமாக அது வள்ளிதிருமணமாக நடந்தேறுகின்ற அந்த இறுதி நிகழ்வை நிஜமான காட்சியாக மங்களகரமான சூழ்நிலையில் பக்தியின் உச்சநிலையிலிருந்து சந்நிதி ஆலயத்தில் பக்திப் பரவசத்துடன் காண்பது பெரும் பேறாக அமைந்திருக்கும்.

சந்நிதி ஆலயத்தில் எவ்வாறு மிகவும் உச்சமான பக்திநிலையில் கந்தசஷ்டி விரதம் அனுஷ்டிக்கப்படுகிறதோ அதேபோன்ற பக்திச்சூழலில் தான் இந்த மங்களகரமான வள்ளி திருமண நிகழ்வும் நடைபெறுகிறது. இந்த வள்ளி திருமண நிகழ்வு நடைபெறுகின்ற நாள்தான் கந்தபுராணப் படிப்பின் அவ்வருட பூர்த்தி நாளாகவும் அமையும் என்பதால் கந்தபுராணப் படிப்பில் பங்குபற்றியவர்கள் எல்லோரும் இந்த வள்ளி திருமண நிகழ்விற்கும் சமூகமளித்திருப்பார்கள். சிவன் பார்வதிதேவியார் திருக்கல்யாணத்தில் தவம்காண்படலத்தில் ஓதுவார்களாக செயற்பட்ட வல்வை நகரைச் சேர்ந்தவர்கள் மற்றும் தென்மராட்சி, வலிகாமம் போன்ற பகுதிகளை சேர்ந்தவர்களும் வள்ளியம்மன் திருக்கல்யாண படிப்பில் ஓதுவார்களாக செயற்படுவதை நாம் இங்கே காணமுடியும். வள்ளி திருமணத்துடன் முற்றுப்பெறும் கந்தபுராணத்தின் இறுதி அத்தியாயத்தை அனைவரும் மாறி மாறி மகிழ்வுடன் படிப்பார்கள். அந்தப் படிப்பில் வேடுவ குலப்பெண்ணான வள்ளியை முருகப்பெருமான் திருமணம் செய்வது தொடர்பான திருவிளையாடல்கள் நிறைந்த காட்சிகள் அங்கே எடுத்துக் கூறப்பட்டுக்கொண்டிருக்கும். இந்த மங்களகரமான நிகழ்வில் பூசகர் குடும்பங்களைச் சேர்ந்த ஆண்களும், பெண்களும் அதிகளவில் பங்குபற்றி இதனை குதூகலமாக கொண்டாடுவார்கள். வள்ளி திருமண நிகழ்வின் கந்தபுராண காட்சிகள் படிக்கப்பட்டு அந்தக் காட்சிகளில் வெளிப்படும் முருகன், வள்ளி திருமண நிகழ்வுகள் ஆலயத்தில் நடந்தேறுவதை பார்க்கின்ற அடியார்கள் பக்திப் பரவசத்தில் மூழ்கியிருப்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரியா சக்தியான தெய்வானை அம்மனுக்கும் முருகனுக்கும் நடைபெற்ற திருமணம் இந்திரலோகத்தில் முறைப்படி நடைபெற்றதால் சிவன் பார்வதி மற்றும் அனைத்து தேவர்களும் பிரசன்னமாகி அவரவர் தமது தகுதிக்கேற்ற ஆசனங்களில் அமர்ந்து இந்த திருமண நிகழ்வில் பங்குகொள்வார். ஆனால் இச்சாசக்தியாக விளங்கும் வள்ளியம்மனுக்கும் முருகப்பெருமானுக்கும் நடைபெற்ற திருமணம் களவுஒழுக்கத்தில் காந்தர்வ திருமணமாக காட்டில் இடம்பெறுகின்றது. எனவே சிவன் பார்வதிதேவி மற்றும் ஏனைய தேவர்களோ அங்கே நேரடியாக பிரசன்னமாகாத தன்மையை நாம் இங்கே காணமுடியும். ஆனாலும் தேவர்கள் வானத்தில் இருந்து பூமாரி பொழிந்து வாழ்த்துகின்ற காட்சிகள் இடம்பெறுகின்றன.

சிவபெருமானும் பார்வதி அம்மையாரும் வானத்தில் இருந்தவாறே முருகன் வள்ளி திருமண நிகழ்வை கண்டு களித்து வாழ்த்துகின்ற பாங்கை கச்சியப்பசுவாமிகள் பின்வருமாறு பாடல்களில் காட்டுகின்றார்.

*ஆவதோர்காலை தன்னிலரியுநான் முகனும் வானோர்*
*கோவோடு பிறருஞ் சூழக்குலவரை மடந்தையோடுந்*
*தேவர் கடேவன் வந்துசேண் மிசை நின்றுசெவ்வேள்*
*பாவையைவதுவை செய்யும் பரிசினை முழுதுங்கண்டான்*

முருகப்பெருமான் தெய்வானை அம்மனையும் வள்ளியம்மனையும் திருமணம் செய்கின்ற திருக்கல்யாணங்கள் புராணங்களில் கூறப்பட்டு ஆலயங்களில் அடியார்களுக்காக இடம்பெற்றுவருகின்ற நிகழ்வுகளாகும். அதேபோல இந்த திருமணங்களுக்கான பின்னணிகளையும் நாம் அறிந்திருப்பது பொருத்தமானதாகும். இமயமலையில் சரவண தடாகத்தில் அமுதவல்லி சுந்தரவல்லி ஆகிய இருவரும் விஷ்ணுவின் மகளாக பிறந்து முருகப்பெருமானை அடைவதற்காக தவம் செய்கின்றார்கள். அப்பொழுது முருகப்பெருமான் காட்சிகொடுத்து அமுதவல்லியை இந்திரன் மகளாகவும் சுந்தரவல்லியை வேடுவர் மகளாகவும் பிறந்து தன்னை அடையலாம் என அருள் வாக்கு கொடுக்கின்றார். இந்த வரலாற்றுப் பின்னணியின் அடிப்படையிலேயே தற்பொழுது நாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வானை அம்மன் வள்ளியம்மன் திருக்கல்யாணங்களை ஆலயங்களில் காண்கின்றோம்.

ஆம்! எமது வாழ்வியலில் **எவையும் காரண காரியத் துடனேயே** இடம்பெறுகின்றன என பெரியவர்கள் கூறக் கேட்டிருக்கின்றோம். அது மானிடவாழவில் மட்டும் நடைபெறுவதில்லை. எமது சமயத்தில் உள்ள தெய்வங்களின் நிகழ்வுகள் மற்றும் தேவர்களின் நிகழ்வுகளிலும் கூட அப்படித்தான் நடந்துவருகின்றன என்ற தத்துவங்களையும் இந்த திருக்கல்யாணங்களின் மூலம் நாம் அறியக் கூடியதாக உள்ளது.

தெய்வானைஅம்மன் வள்ளியம்மன் திருமணங்களில் கிரியாசக்தியான தெய்வானைஅம்மன் கிரியா சக்திக்குள்ள இயல்புக்கிணங்க அவர் முருகப்பெருமானை திருமணம் செய்யப்போவதை முன்பே உணர்ந்து கொள்ள முடிகின்றது. ஆனால் இச்சாசக்தியான வள்ளியம்மை முருகப்பெருமானை திருமணம் செய்யப்போகின்ற முற்பிறப்பு தொடர்பான சூழல்நிலைகளை அறிய முடியாதவராக விளங்குகின்றார். இதனால்தான் முருகப்பெருமான் வள்ளியம்மையை தினைப்புனத்திற்கு நாடிச் சென்று காட்சி கொடுத்து முற்பிறப்பு தொடர்புகளை அவருக்கு விளங்கச் செய்து திருமணம் செய்கின்ற நிகழ்வுகள் நடந்துவருகின்றன.

தேவர்கள் ஏன் மோசமான துன்பங்களை அனுபவிக்க நேரிட்டது என்பது தொடர்பான விடயங்களையும் தெய்வானை அம்மன் திருக்கல்யாணத்தின் பின்னணியிலிருந்து நாம் அறிந்து கொள்ள முடியும்.

தக்கன் முழுமுதற்கடவுளான சிவபெருமானை நிராகரித்து அவரை அவமதித்து விஷ்ணுவை முதன்மைப்படுத்தி தனது யாகத்தை நடாத்தியே தீருவேன் எனச் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றான். அப்பொழுது நந்திதேவர் தக்கனுக்கு புத்திமதி சொல்லியும் அவன் அதை செவிமடுக்காததால் நந்திதேவர் சென்றுவிடுகின்றார். அதன் பின்பு ததீச முனிவர் வந்து தக்கன் அவ்வாறு யாகம் செய்வதால் ஏற்படப்போகும் விபரிதமான விளைவுகளை விபரமாக எடுத்துக் கூறியும் தக்கன் செவிமடுக்காது யாகத்தை தொடருகின்றான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த சூழ்நிலையில் தேவர்கள் தக்கன் செய்யும் அந்த யாகத்தில் பங்குபற்றாது விலகிச்சென்றிருக்கலாம் ஆனால் தேவர்கள் தக்கன் மேல் உள்ள பயத்தாலும் மற்றும் இந்த யாகம் நிறைவேறினால் தமக்கும் ஏதாவது மேன்மை கிடைக்கும் என்ற காரணங்களாலும் அந்த யாகத்தில் பங்கு கொள்ளுகின்ற பாவச் செயலை செய்கின்றனர். இவ்வாறு தேவர்கள் செய்த பாவத்தினால் தான் அசுரர்களால் தேவர்கள் சித்திரவதைப்படுகின்ற நிகழ்வுகள் பின்பு நடைபெறுகின்றன. ஆம் தேவர்கள் இவ்வாறு மோசமான துன்பங்களை அனுபவிப்பதற்கு அவர்கள் செய்த வினைதான் அதற்கு காரமணாக அமைந்திருப்பதையும் மனிதர்களாகிய நாம் உணர்ந்துகொள்ளவேண்டும்.

இறுதியில் முருகப்பெருமான் சூரனை வதம் செய்து தேவர்களை துன்பங்களில் இருந்து மீட்கின்றார். இதனால் தேவர்கள் இதற்கான தங்களின் நன்றியாகவும் பிரதிஉபகரமாகவும் இந்திரன் மகளான தெய்வானைஅம்மனை முருகப்பெருமானுக்கு மணம் செய்து கொடுக்கும் நிகழ்வு நடைபெறுகிறது. ஆகவே இறைனால் மக்களுக்காக படைக்கப்பட்ட புராணங்களை கற்று மக்களாகிய நாம் பயன் அடைவது சிறப்பானது.

வல்வை வைத்தீஷ்வரன் ஆலயத்தில் உச்சநிலையான ஆகம விதிகளின்படி நடைபெறும் சிவன் பார்வதி திருமணமும் ஆகமவிதிக்கு உட்படாது வாய்கட்டிப் பூசை செய்யும் ஆலயமான சந்நிதியில் இடம்பெறும் முருகன் வள்ளி திருமணங்களும் ஆலயங்களில் இடம்பெறும் திருக்கல்யாணங்கள் என்ற வகையில் பல அம்சங்களில் ஒற்றுமைப்படுவதை நாம் உணர்ந்துகொள்ள முடியும். அதேநேரம் இந்த இரண்டு திருக்கல்யாணங்களிலும் உள்ள பல தனித்துவமான சூழ்நிலைகளையும், காட்சிகளையும் அதனூடாக ஏற்படும் தனித்துவமான பக்தியுணர்வுகளையும் அனுபவிப்பது இறையீடுபாடு உள்ள ஒரு அடியவருக்கு நிச்சயமாக அவரின் ஆன்மீக ஈடேற்றத்திற்கும் உதவுவதாகவும் அமைந்திருக்கும்.

ஓம் முருகா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநாயகர் காப்பு

திகடசக்கரச்செம்முகமைந்துளான்
சகடசக்கரத்தாமரைநாயக
னகடசக்கரவிண்மணியாவுறை
விகடசக்கரன்மெய்ப்பதம்போற்றுவாம்.

உச்சியின்மகுடமின்னவொளிர்தரநுதலினோடை
வச்சிரமருப்பினொற்றைமணிகொள்கிம்புரிவயங்க
மெய்ச்செவிக்கவரிதூங்கவேழமாமுகங்கொண்டுற்ற
கச்சியின்விகடசக்கரக்கணபதிக்கன்புசெய்வாம்.

## சுப்பிரமணியர் காப்பு

மூவிருமுகங்கள்போற்றிமுகம்பொழிகருணைபோற்றி
யேவருந்துதிக்கநின்றவீராறுதோள்போற்றிகாஞ்சி
மாவடிவைகுஞ்செவ்வேள்மலரடிபோற்றியன்னான்
சேவலும்மயிலும்போற்றிதிருக்கைவேல்போற்றிபோற்றி.

தமிழ்ப்பூங்கா - 021 2264014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org